**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்</u>**
**<u>முன்னிலை : திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,</u>**
**<u>மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்</u>**
**<u>2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27 ஆம் நாள்</u>**
**<u>அசல் வழக்கு எண் 124/2018</u>**

1. வையாபுரி
2. பழனிசாமி — வாதிகள்

/இடையே/

1. பழனிசாமி
2. மாணிக்கம் — பிரதிவாதிகள்

இவ்வழக்கு கடந்த 18.09.2019 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு வாதிகள் தரப்பில் திரு.பி.கோபிநாத் வழக்கறிஞர் ஆஜராகியும், 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் திரு.சி.முத்துசாமி வழக்கறிஞர் ஆஜராகியும், 1 மற்றும் 2 பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் தோன்றாதரப்பினர்களாக்கப்பட்டும், வாதி தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை ஆய்வில் இருந்து வந்த மேற்படி வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

**<u>தீர்ப்புரை</u>**

பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ, ஏஜென்டுகளோ, முகவர்களோ, வேலையாட்களோ அல்லது பிரதிவாதிகள் சார்பாக வேறு நபர்களோ வாதிகள் வழக்கு சொத்தினை அமைதியாக அனுபவித்து வருவதை சட்டத்திற்கு புறம்பாக அத்துமீறி நுழையவோ அல்லது கட்டுமானங்கள் கட்டவோ அல்லது வேறுவகையில் இடையூறு செய்யக் கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதிகள் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்கள்.

**<u>1) வாதி வழக்குரையின் சுருக்கம் :-</u>**

1ம் வாதி வழக்கு சொத்தின் முழு உரிமையாளர் ஆவார். தமிழக அரசு வழக்கு சொத்து குறித்து 23.04.1972ம் தேதி 1ம் வாதிக்கு ஆதரவாக டி-கார்டு பட்டா எண்.411/எம்/81ஐ வழங்கியது. 29.02.1974ம் தேதி வருவாய் துறை அலுவலரான மேட்டூர் தாசில்தார் பட்டா புத்தகத்தை 1ம் வாதிக்கு வழங்கியுள்ளார். அதன்பின்னிட்டு வழக்கமான யுடிஆர் பட்டாவாக எண்.903 என 1ம் வாதிக்கு ஆதரவாக வருவாய்துறையினர் வழங்கினர். 1ம் வாதியை தவிர வேறு யாருக்கும் வழக்கு சொத்தில் எவ்வித உரிமையும், அனுபோகமும் கிடையாது. 2ம் வாதி 1ம் வாதிக்கு மூத்த மகன். 2ம் வாதி 1ம் வாதிக்கு விவசாய பணியில் உடன் இருந்து உதவி செய்து வருகிறார். பட்டா மற்றும் அனைத்து வருவாய்துறை ஆவணங்களும் 1ம் வாதியின் பெயரில்

உள்ளது. கந்தாயம் உள்ளிட்ட வரிகள் அனைத்தும் தவறாது 1ம் வாதி பெயரில் கட்டி அனுபவித்து வருகிறார். பிரதிவாதிகள் சகோதரர்கள் மற்றும் வீரன் என்பவரின் மகன்களும் ஆவார்கள். பிரதிவாதிகள் வழக்கு சொத்திற்கு அருகில் உள்ள நிலத்தின் உரிமையாளர்களும், 3ம் நபர்களும் ஆவார்கள். வாதிகள் வழக்கு சொத்தில் ச.எண்.39/16ல் ஆழ்குழாய் கிணறு அமைத்து அதற்கு மின்வாரியத்திடம் இருந்து மின் இணைப்பும் 1ம் வாதி பெயரில் வாங்கியுள்ளனர். பிரதிவாதிகள் வழக்கு சொத்தை வாதிகளிடம் விற்பனை செய்ய கேட்டார்கள். வாதிகளுக்கு வழக்கு சொத்தை தவிர வேறு நிலம் இல்லை என கூறி விற்பதற்கு மறுத்துவிட்டனர். இதனால் பிரதிவாதிகளும், அவர்களது குடும்பத்தாரும் வழக்கு சொத்தை அனுபவிப்பதில் பலவகையில் வாதிகளுக்கு தொல்லைகள் கொடுத்து எல்லைகளை சேதப்படுத்தியுள்ளார்கள். 1ம் வாதி வழக்கு சொத்திற்கு வில்லங்கம் போட்டுப் பார்த்த போது எந்த வில்லங்கமும் இல்லை என்பது தெரிந்துள்ளது. எனவே 17.06.2011ம் தேதி 1ம் வாதி மேட்டூர் தாசல்தாரிடம் வழக்கு சொத்திற்கு எல்லைகள் வரையறுத்து கொடுக்கும்படி மனு செய்தார். அதன்படி 12.10.2011ம் தேதி சர்வேயர் வந்து வழக்கு சொத்துக்களை அளந்து அத்துகாட்டி எல்லைகளை நிர்ணயித்து கொடுத்தார். 13.09.2018ம் தேதி பிரதிவாதிகள் ரவுடிகளுடன் சேர்ந்து கொண்டு வழக்கு சொத்தில் அத்துமீறி நுழைந்து உயிர்வேலியை சேதப்படுத்த முயற்சி செய்தார்கள். பிரதிவாதிகளின் துர் அக்கிரம செயலை ஊர் பெரியவர்களின் துணை கொண்டு கஷ்டப்பட்டு தடுத்தனர். உடனடியாக வாதிகள் கருமலைக்கூடல் காவல்நிலையத்தில் புகார் அளித்தும் பிரதிவாதிகள் செல்வாக்கின் காரணமாக அதனை பரிசீலனை செய்யவில்லை. 30.09.2018ம் தேதி பிரதிவாதிகள் ஆட்களுடன் தாவா சொத்தில் நுழைந்து ஆக்கிரமிப்பு செய்ய முயன்றனர். எனவே வாதிகள் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதிகள் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்கள்.

**<u>2) பிரச்சினை</u>**

இவ்வழக்கு அனுமதிக்கத்தக்கதா என்பதே பிரச்சினையாகும்.

**<u>3) பிரச்சினைக்கான தீர்வு</u>**

(i) வாதிகள் தரப்பில் 2ம் வாதி பழனிசாமி என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, 23.04.1972 தேதியிட்ட 1ம் வாதிக்கு ஆதரவான டி-கார்டு பட்டாவின் அசல் வா.சா.ஆ.1 ஆகவும், 28.01.1985 தேதியிட்ட 1ம் வாதிக்கு ஆதரவான யுடிஆர் பட்டாவின் அசல் வா.சா.ஆ.2 ஆகவும், பட்டா பாஸ்புத்தகத்தின் அசல் வா.சா.ஆ.3 ஆகவும், அ பதிவேட்டின் இணைய நகல் வா.சா.ஆ.4 ஆகவும், 17.06.2011 தேதியிட்ட மேட்டூர் தாசில்தாரிடம் எல்லைகள் நிர்ணயிக்க கோரிய மனு மற்றும் சலானின் அலுவலக நகல் வா.சா.ஆ.5 ஆகவும், 16.03.2013 தேதியிட்ட ஆர்டிஐ

விதிப்படி மேட்டூர் தாசில்தார் வழங்கிய தகவல் கடிதத்தின் சார்வு நகல் வா.சா.ஆ.6 ஆகவும், 13.06.2011 தேதியிட்ட வில்லங்க சான்றிதழின் அசல் வா.சா.ஆ.7 ஆகவும், 1387 முதல் 1418 வரையிலான கந்தாய ரசீதுகளின் அசல் வா.சா.ஆ.8 ஆகவும், 06.06.2011 தேதியிட்ட கணிணி பட்டா அசல் வா.சா.ஆ.9 ஆகவும், குடும்ப அட்டையின் நகல் வா.சா.ஆ.10 ஆகவும், வாதிகளின் ஆதார் அட்டையின் நகல் வா.சா.ஆ.11 ஆகவும், பட்டா எண்.903-ன் கணிணி நகல் வா.சா.ஆ.12 ஆகவும் குறியீடு செய்யப்பட்டது.

(ii) 2 ம் வாதியான வா.சா.1 வழக்குரையை உறுதிப்படுத்தி சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.1-ன் சாட்சியம் வா.சா.ஆ.1 முதல் 4, வா.சா.ஆ.8, 9, 11, 12 வரையிலான சான்றாவணங்களிலிருந்து வாதிகள் வழக்கு சொத்துக்களின் சுவாதீனத்தில் உள்ளது தெரிய வருகிறது. பிரதிவாதிகள் தோன்றதாரப்பினர்களாக உள்ளதால் வா.சா.1-ன் சாட்சியத்தை நிராகரிக்க எவ்வித முகாந்திரமும் காணப்படவில்லை. எனவே சட்டப்படியான அனுபவத்தில் உள்ள வாதிகளின் சுவாதீனத்தை இடையூறு செய்ய பிரதிவாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்பதால் வாதிகள் கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கதக்கது எனவும் இவ்வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதித்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ, ஏஜென்டுகளோ, முகவர்களோ, வேலையாட்களோ அல்லது பிரதிவாதிகள் சார்பாக வேறு நபர்களோ வாதிகள் வழக்கு சொத்தினை அமைதியாக அனுபவித்து வருவதை சட்டத்திற்கு புறம்பாக அத்துமீறி நுழைந்தோ அல்லது கட்டுமானங்கள் கட்டவோ அல்லது வேறுவகையிலோ இடையூறு செய்யக் கூடாது என நிரந்தரமாக தடையுறுத்தி வாதிகள் கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

**ஒம்/-திரு. எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**மேட்டூர்.**

**<u>வாதி தரப்பு சாட்சி</u>**

வா.சா.1 பழனிசாமி

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>**

| வரிசை எண் | தேதி | ஆவணங்கள் | தன்மை |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 23.07.1972 | 1 ம் வாதிக்கு ஆதரவான டி-கார்டு பட்டா | அசல் |
| வா.சா.ஆ.2 | 28.01.1985 | 1 ம் வாதிக்கு ஆதரவான யுடிஆர் பட்டா | அசல் |
| வா.சா.ஆ.3 | | பட்டா பாஸ் புத்தகம் | அசல் |
| வா.சா.ஆ.4 | | அ-பதிவேடு | இணைய நகல் |
| வா.சா.ஆ.5 | 17.06.2011 | மேட்டுர் தாசில்தாரிடம் எல்லைகள் நிர்ணயிக்க கோரிய மனு மற்றும் சலான் | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.6 | 16.03.2013 | ஆர்டிஐ விதிபடி மேட்டுர் தாசில்தார் வழங்கிய தகவல் கடிதம் | சார்வு நகல் |
| வா.சா.ஆ.7 | 13.06.2011 | வில்லங்க சான்றிதழ்-2 | அசல் |
| வா.சா.ஆ.8 | | 1387 முதல் 1418 வரையிலான கந்தாய ரசீதுகள் | அசல் |
| வா.சா.ஆ.9 | 06.06.2011 | கணினி பட்டா | அசல் |
| வா.சா.ஆ.10 | | குடும்ப அட்டை | நகல் |
| வா.சா.ஆ.11 | | வாதிகளின் ஆதார் அட்டை | நகல் |
| வா.சா.ஆ.12 | | பட்டா எண்.903 | கணிணி நகல் |

**ஒம்/-திரு. எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**மேட்டுர்.**